கோவை மாவட்ட ஆட்சியரும், கோவை தொழிலாளர் நலத் துணை ஆணையரும் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகின்றனர். விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெறாமல் தடுக்க போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இப்பொழுது நிலைமை அமைதியாக உள்ளது. எனவே அவையை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

(முற்பகல் 10–30)

4. கவன ஈர்ப்பு.

விவசாயிகளுக்கு லெவி விலையில் சிமெண்ட் கிடைக்காதது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, ''புதிய லெவித் திட்டத்தில் விவசாயக் காரியங்களுக்கு லெவி விலையில் சிமெண்ட் கிடைக்காததால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

1979-ம் ஆண்டிலிருந்து சிமெண்ட் மீது கட்டுப்பாடு இருந்து வந்தது. அப்போது தமிழகத்திற்குச் சராசரியாக ஒரு காலாண்டிற்கு 3.4 லட்சம் டன்கள்தான் ஒதுக்கப்பட்டு வந்தது. இது மின்சாரம் மற்றும் பாசனத்துறைகளுக்கும் உட்பட்டது. இந்த ஒதுக்கீட்டிலிருந்து 1.5 லட்சம் டன்கள் பொது விநியோகத்திற்காக ஒதுக்கப்பட்டு வந்தது. 1-3-1982 முதல் மத்திய அரசு சிமெண்ட் மீதான கட்டுப்பாட்டை தளர்த்திய பின்பு மத்திய சிமெண்ட் கட்டுப்பாட்டலுவலர், புதுடில்லி நடப்பு ஆண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளுக்கு 1.42 லட்சம் டன்கள் ஒதுக்கீடு செய்துள்ளார். இந்த ஒதுக்கீட்டிலிருந்து பொது மக்கள் விநியோகத்திற்காக 30,000 டன்களே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது எல்லா மாவட்டங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. சிமெண்ட் மீதான கட்டுப்பாட்டை தளர்த்திய பிறகு, வெளிச் சந்தையில் ஒரு சிமெண்ட் மூட்டை ரூ. 62 அளவில் தாராளமாகக் கிடைத்து வருகிறது.

2. மத்திய அரசின் புதிய கொள்கையின்படி கீழ்க்கண்ட நுகர்வோர்கள், திட்டங்கள் மற்றும் வேலைகள் ஆகியவை லெவி சிமெண்ட் ஒதுக்கீடு பெறும் தகுதியுடையவை ஆகும்.

(அ) முன் உரிமை பகுதிக்கும், சமூகத்தில் நலிந்த பிரிவினருடைய தேவைகளை நிறைவு செய்வதற்காக லெவி சிமெண்ட் உபயோகப்படுத்தப்படும். முன்போலவே மாநிலங்கள் ஒவ்வொரு காலாண்டுக்கும் மைய அரசிடமிருந்து சிமெண்ட் ஒதுக்கீடுகளைப் பெறும். இந்த ஒதுக்கீடுகளைக் கொண்டு கீழே குறிப்பிட்டுள்ள இனங்களின் தேவைகள் நிறைவு செய்வதற்காக பயன்படுத்தப்படும்:—

(1) அரசுத்துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அலுவலகங்கள்.

(2) ஆலை கட்டிடம் கட்டுவதற்காக சிறு தொழில் நிறுவனங்கள் சிமெண்ட்டை மூலப் பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யும் சிறுதொழில்கள், சமூக மேம்பாட்டிற்காக அமைந்துள்ள கிராமங்களில் வீடு கட்டுதல், குடிசைவாழ் மக்கள், ஆதி திராவிடர்கள், ஆதிவாசிகள் சமூகத்திலுள்ள ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டுதல், கிராமங்களுக்கு தண்ணீர் வழங்கும் திட்டம், மேலும் புதிய 20 அம்சத் திட்டத்தில் அடங்கிய எல்லா இனங்கள்.

(3) 1981-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1 லட்சத்திற்கு அதிகமாக ஜனத்தொகை உள்ள நகரங்களுக்கு 100 சதுர மீட்டர் வரையிலும், 1 லட்சத்திற்கு குறைவாக ஜனத்தொகை உள்ள கிராமப்புற பகுதிகளுக்கு 120 சதுர மீட்டர் மேற்படாமல் தரைமட்டம் அமையும் வீடுகள் கட்டுதல்:

(4) குடியிருப்பு வீடுகளுக்குப் பழுது பார்த்தல். மேலும் நீர்ப்பாசனம், மின்சாரம் திட்டங்களுக்காக லெவி சிமெண்ட் வழங்கப்படும்.

(5) திரை அரங்குகள், சிற்றுண்டிசாலைகள், வங்கிகள், பலமாடி அடுக்கு கட்டிடங்கள், வியாபார கட்டிடங்கள், 100/120 சதுர மீட்டர் தரைமட்டம் மேலுள்ள கட்டிடங்கள் ஆகியவைகளுக்கு லெவி சிமெண்ட் வழங்கப்பட மாட்டாது. ஆனால் கோயில்கள், மசூதிகள், மாதாகோயில்கள் போன்ற எல்லா மத வழிபாடு நடைபெறும் இடங்கள் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற கல்வி நிலையங்கள் ஆஸ்பத்திரிகள் மற்றும் தர்ம ஸ்தாபனங்கள் கட்டுவதற்கும் லெவி சிமெண்ட் ஒதுக்கப்படும்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1982 செப்டம்பர் 8

3. அண்மையில் வந்துள்ள செய்திகளின்படி தமிழகத்திலுள்ள இரண்டு சிமெண்ட் ஆலைகள் (இண்டியா சிமெண்ட் தாளையத்தூர் அரசு சிமெண்ட்ஸ், ஆலங்குளம்) தங்களின் திறனில் 50 சதவீதத்துக்கு மேல் உற்பத்தி செய்யும் சிமெண்டை வெளிச் சந்தையில் எந்தவிதமான விலை அல்லது விநியோக கட்டுப்பாடு இல்லாமல் விற்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

4. கட்டுப்பாடு இருந்தபோது பொதுமக்கள் விநியோகத்திற்காக 1.5 லட்சம் டன்கள் அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. மைய அரசின் குறைவான ஒதுக்கீட்டினால் பொது மக்கள் விநியோகத்திற்காக காலாண்டிற்கு சுமார் 30,000 டன்கள் தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இந்த ஒதுக்கீட்டிலிருந்து பொதுமக்கள் 100/120 சதுர மீட்டர் தரைமட்டம் மேலுள்ள கட்டிடங்கள் கட்டுவதற்கும், குடியிருப்பு களை பழுது பார்க்கவும் அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கு மேல் தேவைக்கு விவசாய காரியங்கள் உட்பட பொதுமக்கள் சிமெண்டை வெளிச்சந்தையிலிருந்து வாங்கிக் கொள்ளலாம். லெவி சிமெண்ட்டின் ஒதுக்கீட்டை அதிகப்படுத்துமாறு மைய அரசுக்கு மாநில அரசு எழுதியது. இதை அதிகப்படுத்த முடியாது என்று மைய அரசு தெரியப் படுத்தியுள்ளது. ஆதலின் மைய அரசு லெவி சிமெண்ட்டை கூடுதலாக ஒதுக்கீடு செய்தாலன்றி மாநில அரசு எந்த ஒரு தேவையோ, அல்லது பொதுமக்களின் தேவையோ முழுவதும் பூர்த்தி செய்ய இயலாது.

5. மேலும் இவ்வரசு பின்பற்றும் சிமெண்ட் கொள்கை, மத்திய அரசின் கொள்கையின் அடிப்படையிலேயே அமைந் துள்ளது. மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்ட சிமெண்ட்டை அரசுத் துறைகளுக்கும் நிறுவனங்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்குமென மறு ஒதுக்கீடு செய்வதன்றி தனியாக வேறு எதுவும் செய்வதற்கில்லை.

திரு. வேட்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இதுவரையில் விவசாயக் காரியங்களுக்காகக் கொடுக்கப்பட்டு வந்த—கிணற்றுச் சுற்றுச் சுவர் கட்ட, பைப் லைன் போட, விவசாயக் கட்டடங்கள் கட்ட கொடுக்கப்பட்டு வந்த—குறைந்தபட்ச சிமெண்ட் கூட இன்றைக்கு கொடுக்கப் படக்கூடிய நிலைமை இல்லையென்று சொல்கிறார்கள். காரணம் மத்திய அரசினுடைய ஒதுக்கீடு குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. விவசாயக் காரியங்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவீதம் கொடுக்க வேண்டுமென்று மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: சிமெண்ட் மீது கட்டுப்பாடு இருந்தபோது கால் ஆண்டுக்கு 3.4 லட்சம் டன்கள் இப்போது கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதற்குப் பிறகு ஒதுக்கப்படுவது 1.42 லட்சம் டன்கள். 3.4 லட்சம் டன்கள் கால் ஆண்டுக்கு ஒதுக்குவதில் பொதுவிநியோகத்திற்கு 1.5 லட்சம் டன்கள் ஒதுக்கப்படுகிறது. இப்போது மொத்தமே 1.42 லட்சம் டன்கள்தான் ஒதுக்கப்படுவதால் 30 ஆயிரம் டன்கள் மட்டுமே மாவட்டங்களிலே பொது மக்களுக்கு விநியோகத்திற்காகக் கொடுக்கப்படுகிறது. மீதம் இருக்கிற லெவி சிமெண்ட் அரசினுடைய பல்வேறு துறைகளுக்கு தன்னிறைவுத் திட்டத்திற்கு, சத்துணவுத் திட்டத்தின் கீழ் கட்டடங்கள் கட்டுவதற்கு, பொது துறைகளுக்கு ஒதுக்கப்படுகிறது. இவற்றைக் கருத்திலே கொண்டு குறைவான அளவு வழங்கப்படுவதைச் சுட்டிக்காட்டி மைய அரசுக்கு மாநில அரசு லெவி சிமெண்ட்டை அதிகமாக ஒதுக்குமாறு தொடர்ந்து வற்புறுத்தும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் 'இவ்வரசு பின்பற்றும் சிமெண்ட் கொள்கை, மத்திய அரசின் கொள்கையின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மைய அரசு விவசாயிகளுக்கு விவசாய காரியங்களுக்காக குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கவேண்டுமென்று மாநில அரசு மைய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, மாநில அரசு லெவி சிமெண்ட்டை எப்படிப் பகிர்ந்து கொடுக்க வேண்டுமென்பதற்கான வழிமுறைகளை மைய அரசுதான் வழிகாட்டுதலாகக் கொடுக்கிறார்கள். அந்த வழிமுறைகளைப் பின்பற்றித்தான் மாநில அரசு ஒதுக்குகிறது. விவசாயிகள் கிராமப்புறங்களிலே வீடுகளைக் கட்ட, வீடுகளைப் பழுதுபார்க்க, இப்படிப்பட்ட இனங்களுக்கு மைய அரசு மைய அரசின் பரிந்துரையின் பேரில் மாநில அரசு ஒதுக்குகிறது. விவசாயிகள் ஒட்டுமொத்தமாக புறக்கணிப்படுகிறார்கள் என்று சொல்ல முடியாது. விவசாயிகள் பயன்படுத்துவதற்கு லெவி சிமெண்டிலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்ற முறையில் மைய அரசு சொல்லி மாநில அரசு அதைப் பின்பற்றுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனையை ஏற்று மைய அரசினுடைய ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு மாநில அரசு மைய அரசை வற்புறுத்தும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS